1979 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை,

திரு. மொ. பரமசிவம் : தலைவர் அவர்களே, இந்த ஆஸ்பத்திரியிலே போதுமான படுக்கை வசதியில்லை. அதனால், பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரிக்கு அனுப்பப்படுகிறார்கள். அதைப் போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, வானூர் ஒன்றியத்தில் தைலாபுரத்தில் நடைபெற்று வருவது அரசு மருத்துவமனை அல்ல. அது தென் ஆற்காடு மாவட்டம் கிளியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் அவசரமாக வருகின்ற பிரசவங்களுக்கு படுக்கைகள் இருக்கிறதே தவிர, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதிகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

B. I. M. பட்டதாரிகள்.

*வினா எண் 156—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) ஆண்டிற்கு 15 B.I.M. பட்டதாரிகள் துணை மருத்துவ அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு வந்தது, பின்னர் 7 ஆகக் குறைக்கப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆமெனில் அந்த எண்ணிக்கையை மீண்டும் உயர்த்தும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஆண்டுக்கு 15 இந்திய மருததுவாகள அதாவது பி. ஐ. எம். பட்டதாரிகள் துணை மருத்துவர்களாக நியமிக்கப்பட்டு வந்தார்கள். குறைக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் குறைக்கப்பட்டு விட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, அதை மீண்டும் பரிசீலித்து '' பீ இந்தியன், பை இந்தியன் '' என்ற கருத்திற்கேற்ப 15-க்கும் குறைவில்லாமல் அத்தகைய பட்டதாரிகளை துணை மருத்துவர்களாக நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, சித்த மருத்துவ பயிற்சியை ஊக்குவிக்கும் முறையிலே சித்த மருத்துவம் தமிழக மக்களுக்கு பெரிதும் கிடைக்கச் செய்வதற்கும், இந்த ஐந்தாண்டு கால இறுதிக்குள் குறைந்தது ஆண்டுக்கு 20 மருத்துவ மனைகள் விதம் 100 தாலுகாக்களில் தாலுகா அல்லாத கிராமங்களில் சித்த மருத்துவ மனைகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற குறிப்பின்படி, இதுவரையில் தமிழகத்தில் 49 தாலுகாக்களில் சித்த மருத்துவ மனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது ஆரம்பிக்கப்படுகின்ற சித்த மருத்துவ மனைகளில் தேவையான மருத்துவர்கள் அவ்வப்போது காலியாகும் இடங்களுக்கு அமர்த்தப்படுவார்கள். ஆகவே, 15 பேர்களுக்கும் குறைவாக நியமிக்கும் நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00 மணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கோ. இளங்கோவன் : தமிழ்நாட்டில் பணி புரியக் கூடிய மொத்தம் பி. ஐ. எம். டாக்டர்கள் எத்தனை பேர்? பட்டம் பெற்று எத்தனை பேர் பணியில்லாமல் இருக்கிறார்கள் ? அரசு அதனை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பி.ஐ.எம். பட்டதாரிகள் துணை மருத்துவ அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 1972-73-ல் 26 பேர் ; 1973-74-ல் 15 பேர் ; 1974-75-ல் 26 பேர் ; 1975-76-ல் 18 பேர் ; 1976-77-ல் 13 பேர் ; ஆக இவ்வளவு பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. செ. இராமலிங்கம் : குடந்தை மருத்துவ மனையில் சித்த வைத்தியப் பிரிவை விரிவுபடுத்தவும் பல் சிகிச்சைப் பிரிவு, இ. என். டி. பிரிவு ஆரம்பிக்கவும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 13 லட்சம் ரூபாய்க்கு திட்டம் தீட்டப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்ட இடத்தைப் பற்றிக் கேட்டால் அமைச்சரிடம் எங்கே பதில் இருக்கும் ? மூலக் கேள்வி சித்த வைத்தியர்களைப் பற்றி மாநில அளவில் கேட்கப்பட்டதாகும். கும்பகோணத்தைப் பற்றிக் குறிப்பாகக் கேட்டால் அமைச்சரிடம் எங்கே விளக்கம் இருக்கும் ?

திரு. செ. இராமலிங்கம் : குடந்தை மருத்துவ மனையில் சித்த வைத்தியப் பிரிவு தொடங்க சோழன் போக்குவரத்துக் கழகம் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்து அந்த சித்த

1979 பிப்ரவரி 23]

வைத்தியப் பிரிவு தொடங்கப்படாததன் காரணமாக சோழன் போக்குவரத்துக் கழகம் கொடுத்த நன்கொடையைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. மீண்டும் சித்த வைத்தியப் பிரிவை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மூலக் கேள்வி சித்த வைத்தியப் பிரிவில் பணியாற்றுகிற மருத்துவ அதிகாரிகளைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் விரிவாகப் பதில் சொல்ல இயலும்.

கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்.

*வினா எண் 157—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அனைத்து நாட்டு கோ-ஆப்டெக்ஸ் என்ற ஏற்றுமதிப் பிரிவினை அமைத்திடும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : (அ) ஆம்.

(ஆ) கைத்தறித்துணி ஏற்றுமதியை விரிவாக்கவும், கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளை நேரிடையாக ஏற்றுமதி செய்யவும் ''கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்'' என்னும் ஒரு பிரிவை தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் 1—7—1975 முதல் ஏற்படுத்தியுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற கைத்தறித் துணிகளைச் சிறப்பாக விற்பனை செய்வதற்காகத் தமிழகத்தில் மட்டுமல்லாமல் மத்தியில் இருக்கும் டில்லியில் கூட கைத்தறித் துணிக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்திருக்கிறது. கைத்தறித் துணியை அயல்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளில் விரும்பி வாங்குவதாகத் தெரிகிறது. ஆகவே தமிழக அரசு முக்கியமான அயல்நாடுகளில் கைத்தறித் துணிக் கண்காட்சிகளை நடத்த ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : இந்த ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள துண்டு, சட்டை துணி போன்ற ரகங்களை ஆஸ்திரேலியா, பிரான்ஸ் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றும , செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் இண்ட நேஷனலின் நோக்கம் நேரடி ஏற்றுமதி செய்வதாகும். நற்